1969 மார்ச் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆசிரியர்களுடைய கோரிக்கை அது தான். 'நீங்கள இலவசக் கல்வித திட்டத்தை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு தனியார் துறைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் குறைத்துக் கொடுப்பது சரியா' என்று கேட்டிருக்கிறார்கள். அந்த நியாயத்திலே எந்த விதமான சந்தேகமும் இல்லை, எப்படிக் கொடுப்பது, கொடுத்தால் எவ்வளவு பணம் வேண்டும் என்பதுதான் நம்முன் உள்ள பிரச்சினை.

New College for Madurai

* 332 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state--

(*a*) whether the Government has permitted the State Wakf Board to start a college at Madurai this year; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) அரசாங்கத்திடமிருந்து அனுமதி எதும் பெற வேண்டிய தேவையில்லை.

(இ) அனுமதி வழங்குவதற்குத் தகுதி வாய்ந்த அதிகார நிறுவனமாகிய மதுரைப் பல்கலைக் கழகம் வக்ஃப் வாரிய நிர்வாகத்தின் கீழ் 1968-69-ம் ஆண்டில் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்குத் தாற்காலிக இணைப்பு வழங்கியுள்ளது.

புகுமுக வகுப்பில் பாடத்திட்டத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

பகுதி 1 — ஆங்கிலம்.

பகுதி 2 — தமிழ், உருது, அராபி, ஹிந்தி.

பகுதி 3 —	கணிதம், பௌதிகயியல், வேதியியல் இயற்கை, விஞ்ஞானம்.	(80)
	பௌதிகயியல், வேதியியல் (கற்பிக்கும் மொழி ஆங்கிலம்).	(80)
	இயற்கை, விஞ்ஞானம், பௌதிகயியல், வேதியியல் (கற்பிக்கும் மொழி தமிழ்).	(80)
	பொருளாதாரம், வரலாறு, தருக்கவியல் (கற்பிக்கும் மொழி ஆங்கிலம்).	(90)
	பொருளாதாரம், வரலாறு, சிறப்புத் தமிழ் (கற்பிக்கும் மொழி தமிழ்).	(90)

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : வக்ஃப் வாரியத்தின் சார்பில் மதுரை நகரத்தில் ஆரம்பிக்கபட இருக்கும் புதிய கல்லூரியில் எப்போது பட்டப் படிப்பு தொடங்கப்படும ? அதற்குரிய புதிய கட்டடத்தை எப்போது அரசு கட்டிக் கொடுக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டடம் கட்டுவதும் பட்டப்படிப்பு தொடங்குவதும் ஒன்றுக்கொன்று இணைந்த செயல்களாகும். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் உயர் பட்டப் படிப்புக்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்றுத் தொடங்கப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இரண்டாம் பகுதியில் தமிழ், உருது, இந்தி கற்றுக் கொடுக்கப்படும் என்றார்கள். இந்திப் படிப்பு சொல்லிக் கொடுக்கப் போவதில்லை என்று சொல்லிக் கொள் கிறேன்.

Employment Officers—Employers contact

*406 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the details of the scheme of Employment Officers contacting employers adopted in Employment Exchanges?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலதிபர்களுடன் தொடர்பு கொள்வது வேலை வாய்ப்பு அதிகாரிகளின் முக்கியமான அலுவல்களில் ஒன்று. உயிர்ப் பதிவேடுகளில் விண்ணப்பதாரர்களைக் கொண்டு பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு மட்டுமின்றி மாவட்டத்தில் உள்ள ஆள்பலம் குறித்துத் தொழிலதிபர்களுக்குத் தகவலும், புள்ளி விவரமும் தருவதற்காகவும் இந்தத் தொடர்பு வேண்டியுள்ளது. 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (பதவிக் காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தைச் செயல்படுத்துவதும் தொழிலதிபர்கள் தங்கள் தரப்பில் கடமைகளை நிறைவேற்றுவதும் இத் தொடர்பின் மற்றொரு நோக்கமாகும்.

இத்தகைய தொடர்புகளைப் பலனளிக்கத் தக்க வகையாகச் செய்வதற்கென பொதுத்துறையிலும், 10 அல்லது 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தனிப்பட்ட நிறுவனங்களிலும் உள்ள எல்லாத் தொழிலதிபர்களின் பட்டியல் ஒன்றை வேலைவாய்ப்பு அதிகாரிகள் அனைவரும் வைத்து வருகின்றனர். எல்லா நிறுவனங்களும் படிப்படியாகத் தொடர்பு கொள்வதற்கு இவ்வதிகாரிகள் திங்கள் தோறும் தொடர்புத் திட்டம் வகுத்துக் கொள்கின்றனர். பட்டியலில் உள்ள எல்லாத் தொழிலதிபர்களையும் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் தொடர்பு கொள்ளும் வகையில் தொடர்புத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

திரு. பி. வேலுசாமி : சென்ற ஆண்டு இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது ? எவ்வளவு பேர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு தேடித் தரும் நிறுவனங்களிடம் தனியார் துறையில் தொழில் ஆரம்பிக்கிறவர்கள் இவைகளையெல்லாம் தெரிவிக்க வேண்டுமென்று இருந்தும்கூட பொதுவாகப் பல இடங்களில் இருந்தும் அப்படிப்பட்ட தகவல்களை அந்த அதிகாரிகளுக்குத் தருவதில்லை. அவரவர்களே நியமித்துக் கொள்கிறார்கள். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கும் இந்த நேரத்தில் இந்த நிறுவனங்கள் மூலமாக அதிக வேலைகளை தேடித் தர முடியும். எனவே எல்லா தனியார் துறை நிறுவனங்களும் வேலை தேடித் தரும் அலுவலகங்களில் இருந்துதான் வேலைக்கு ஆட்களைக் கேட்க வேண்டும் என்ற ஒரு கண்டிப்பான உத்தரவை அரசு இடுமா ? அதை மீறுகிறவர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்க இந்த அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி சட்டத்தில் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து தகவல் பெறக் கூடிய அதிகாரம்தான் அரசுக்கு தரப்பட்டிருக்கிறது. கட்டாயப்படுத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின்படி முடியாது.